## கடுக்காய் நிலவேம்பு கசாயம் :

**‘கடுக்காய்தாரங் கொத்தமல்லிங் கடிய வசம்பு வெண்கோட்ட**

**மெடுத்தார் சுக்கு நிலவேம்பு யிரண்டுமட்டினயுடன் கூட்டிப்**

**பொடித்தூளாக்கி நீர் விட்டுப் பொங்கக் காய்ச்சி யெட்டொன்றாய்**

**குடித்தார் தம்மை ஜ்வரம் விட்டுக் குடிபோமென்று கூறினதே!!!”**

### இதன் விளக்கம் :

நான் மேலே கூறியுள்ள அனைத்து விதமான மூலிகைப் பொருட்களையும் சம அளவு எடுத்துக் கொள்ள வேண்டும்.

1. **கடுக்காய்த்தோல்**
2. **வசம்பு**
3. **சுக்கு**
4. **கொத்தமல்லிவிதை**
5. **வெள்ளைக் கோஷ்டம்**
6. **நிலவேம்பு**

இவைகளை தேவைக்கு சமஅளவு எடுத்துக்கொண்டு இடித்து தூளாக்கி 8 மடங்களவு தண்ணீர் விட்டு நன்கு சுண்ட காய்ச்ச வேண்டும். அதாவது நன்கு வற்றும் வரை சுண்டக்காய்ச்ச வேண்டும். அவற்றை நாள் ஒன்றுக்கு மூன்று அல்லது நான்கு முறைகள் உட்கொண்டு வந்தால் எந்தவிதமான காய்ச்சலும் மிக விரைவில் குணமடையும் என்பது சித்தர்களினுடைய வாக்கு.

இயற்கையோடு இணைந்திடுவோம் !

ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்கிடுவோம்!!

SIDDHAS HEALTHY LIFE ADVISORY CENTRE